1971 ஜூலை 20]

தமிழ்நாட்டுக்கு துரு ஏரு எஃகு தகடுகள் ஒதுக்கீடு

* 332. விஞ—**திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு டன் ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் தகடுகள் (Stainless Steel Sheets) கொடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இம்மாநிலத்திற்கு துரு ஏரு எஃகுத் (Stainless Steel Sheets) தகடுகள் வழங்குவதில், ஆண்டொன்றுக்கு ஒதுக்கீடு இவ்வளவு என்று கிடையாது.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, நம்முடைய தமிழ்நாட்டில் தேவை எந்த அளவிற்கு இருக்கிறது? அந்த அளவில் இந்தியப் பேரரசு ஒவ்வோராண்டும் இந்தத் தகடுகளை ஒதுக்குகிறார்களா, அப்படி ஒதுக்கவில்லையென்றால் நம்முடைய நாட்டிலேயே இந்தத் தகடுகளை யாராவது உற்பத்தி செய்யக் கேட்டிருந்தால் அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வர தகுந்த நடவடிக்கை எடுத்திருக்கிறதா அல்லது அரசே இந்த மாதிரி உற்பத்தி ஆலைகள் நிறுவ நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாட்டின் தேவை 56,800 மெட்ரிக் டன் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. மத்திய அரசு வட பகுதியிலே உற்பத்தி புதிதாகத் தொடங்கியிருக்கிறது. நம்முடைய தேவைக்கேற்ற ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிடைக்கவில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஒரு சிறு ஆலையில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் உற்பத்தியைத் தொடங்கலாம் என்று முயற்சியெடுத்து, மத்திய சர்க்காரை வலியுறுத்தி வருகிறோம். சேலம் உருக்காலையோடு அதையும் இணைக்கலாம் என்ற பரிசிலனையும் உள்ளது.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய தேவைக்கு வேண்டிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். வட மாநிலங்களுக்கு நம்மைவிட 2 மடங்கு, 3 மடங்கு கொடுக்கிறார்கள். மத்திய சர்க்கார் எந்த அடிப்படையில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலை அலாட் செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் இதைப் போன்ற மூலப்பொருள்களை எல்லா மாநிலங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்பொழுது, அந்த மாநிலத்தினுடைய தேவைகளைக் கணக்கிட்டு மாநில அரசாங்கத்திற்குப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டுமென்பது நம்முடைய கோரிக்கை. அதை மத்திய அரசு ஏற்பதாகயில்லை. ஆகவே, இதுபோன்ற சிக்கல்கள் அடிக்கடி வருகின்றன.